பெற்றபோது இன்றைய தினம் மத்திய துணை வேளாண்மைத் துறை அமைச்சராக இருக்கின்ற திரு. ஆர். வி, சுவாமிநாதன் அவர்கள் விவசாயிகள் கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்றவேண்டுமென்றும் அந்த முறையில் அந்தக் கடன் களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நிலத்தினுடைய தன்மைக்கேற்ப நிலத்தினுடைய அளவு நிர்ண யிக்கப்படவேண்டும் என்பது நல்ல ஆலோசனையை அரசும் ஆராய்ந்து வருகிறது. விரைவில் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் விவசாயக் கடனை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்ன நேரத்திலே எந்த மாநில அரசும் விவசாயக் கடனை ரத்து செய்யக்கூடாது, விவசாயக் கடனை மாநில அரசின் வருவாயிலிருந்து ரத்து செய்தால்கூட நாங்கள் மாநில அரசுக்குத் தருவோம் என்று சொல்கிறோமோ அதிலிருந்து குறைத்துவிடுவோம் என்று சொல்கிறார் கள். மாநில அரசு ரத்துசெய்ய முடியாத நிலையை உருவாக்கி இருக்கிறார் கள். மாநில அரசு தொடர்ந்து மைய அரசை பாதிக்கப்பட்டுள்ள விவசாயி களுடைய கடனை பரிவோடு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்கும்.

பீடி, சுருட்டு தொழிலாளர்களுக்கான வைப்பு நிதி சட்டத்தினை அமுல்படுத்தும் திட்டம்.

* வினா எண் 371—திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடி, சுருட்டு தொழிலாளருக்கு பிராவிடெண்டு பண்டு சட்டத்தை அமுல் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் அமுல்படுத்தப்படும் ?

1981 மார்ச் 5]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) தொழிலாளர் வைப்பு நிதி சட்டத்தை 31—5—1977 முதல் பீடி சுருட்டு தொழிலாளருக்கு அமுல் நடத்துவதற்கான அறிக்கையினை மைய அரசு வெளியிட்டுள்ளது. ஆனால் சில பீடி நிறுவனங்களின் மேல் முறையீட்டின் பேரில் இச்சட்டம் அமுல்படுத்துவதை சென்னை உயர் நீதிமன்றமும் உச்ச நீதி மன்றமும் தற்காலிகமாக நிறுத்தி வைத்து ஆணையிட்டுள்ளன. மேற்கண்ட நீதி மன்றங்களின் தீர்ப்புகள் கிடைத்ததும் இது குறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பீடி சுருட்டுத் தொழிலாளர்களுக்கு 1977 ஆம் ஆண்டு முதல் வைப்பு நிதி வைப்பதற்கு மத்திய அரசு அனுமதி அளித்தும் சென்னை உயர் நீதி மன்றத்திலும், சுப்ரீம் கோர்ட்டிலும் தடை விதிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்தத் தடை விதிக்கப்பட்டு ஐந்தாண்டுகள் ஆகின்றன. ஆண்டு ஒன்றுக்கு தமிழகத்திலே இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு ஒரு கோடி ரூபாய் வரையில் இழப்பு ஏற்படுகிறது. எனவே, இந்தச் சட்டத்தை உடனடியாக அமலாக்கவும், தடையை நீக்கவும் மத்திய அரசுக்கு மாநில அரசு கூறி சிக்கிரம் வழிவகை செய்ய ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தை மனத்திற்கொண்டு, இந்த வழக்கை விரைவிலே முடிக்க (Expedite Petition) போட்டு அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு கடிதம் எழுதும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை விரைவாக நடத்துவதற்கு ஆவன செய்யப்படப் போவதாக அமைச்சரவர்கள் கூறியதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இடைப்பட்ட காலத்தில் உரிமையாளர்கள் தாங்கள் கட்ட வேண்டிய பணத்தை முன்பணமாக உயர்நீதிமன்றத்திலே கட்டுவதற்கான வழிவகை உண்டா என்று ஆராய்ந்து செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இது பற்றிய சட்டப் பிரச்சினையை ஆராய வேண்டும். அதைப்பற்றி ஆராயலாம்.

[1982 மார்ச் 5

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கு வைப்பு நிதி என்ற பிரச்னை நீண்ட காலப் பிரச்னையாக இருந்து 1977 ஆம் ஆண்டில் அதற்குத் தீர்வு ஏற்பட்டவுடன் நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் தடை பெற்றிருந்தாலும் நம்முடைய மாநில அரசு எத்தனை முறை முதலாளிகளை அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறது ? சில முதலாளிகள் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண விரும்புவது அரசுக்குத் தெரியுமா ? அப்படியிருந்தால் அவர்களையும், தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்களையும் கலந்து பேசி தடையை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உயர்நீதிமன்றமும், டெல்லியிலே உள்ள உச்ச நீதிமன்றம் தடை விதித்திருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தடை உத்தரவை வாங்கிய முதலாளிகளே கொடுக்க முன்வருகிறார்கள் என்றால் இந்த அரசை விட மகிழ்ச்சியடையக் கூடிய அரசு வேறொன்றும் இருக்க முடியாது. இருந்தாலும் அப்படியொரு (consenses) இருக்கிறதா என்று இந்த அரசு பரிசீலனை செய்யும்.

பெரம்பூர் தொகுதியிலுள்ள குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான இடங்களில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்கும் திட்டம்.

*வினா எண் 372—திரு. சு. பாலன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது பெரம்பூர் தொகுதியில் குடிசை மாற்று வாரியத்திற்கு சொந்தமான இடங்களில் குடியிருப்பவர்களுக்கு அந்த இடத்தைச் சொந்தமாக்கி பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறதா ?

(அ) ஆம் எனில் அந்த நிலம் அவர்களுக்கு இனாமாக கொடுக்கப் படுகிறதா அல்லது கிரயத்திற்கு கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) அரசு நிர்ணயித்துள்ள நிலத்தின் மதிப்பீட்டுத் தொகையை பெற்றுக்கொண்ட பிறகே பட்டா வழங்கப்பட வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS